செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம் ; விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அ௩] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ஞு மார்கழி மீ ௧௬ உ வெள்ளிக்கிழமை (31-12-1971) [இல-௩அ

உ

திருச்சிற்றம்பலம்.

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறு மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.

— மாணிக்கவாசக சுவாமிகள்

## நாவலரும் மறுமலர்ச்சியும்

[சிதம்பரம், நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நிகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களின் 92 வது குருபூசை விழாவில், பேச்சுப போட்டியில் முதல் பரிசு பெற்ற செல்வன் எஸ். அருள்மொழிச்செல்வன் (பத்தாம் வகுப்பு, நாவலர் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்) நிகழ்த்திய பேச்சு:]

பால் மணம் மாருப் பச்சிளங் குழவி; மழலை மாருக் குழந்தைச் செல்வம்; அருந்தவத்தந்தை யின் அம்புயந்தன்னில் பெருந்தவச் சிராய் வீற்றிருந்து பெருஞானம் தனைப் பெற்ற பிள்ளை! அழகிய திருப்புகலித் திருக்குளக் கரையில் எவ்வுயிர்க்கும் இறை தானாய் எழுந்தருளிய எம்பெருமான் கரந்தனிலே பாலமுதச் சுவையுண்டு பண்ணிசைத்த பான்மையினைக் கேட்டிருப்பீர்! அதுபோல் ஒன்பான் வயதினிலே ஏடெடுத்து நாடகத்தை முடித்த தொரு நாவலரின் எல்லையிலா மறுமலர்ச்சிச் செயல் செயல்களைச் சிற்றறிவால் கற்றவரையில் கூற இங்கு விழைகின்றேன்.

ஏடெடுத்துச் செல்லும் எல்லையிலாச் செல்வர்களே! பார் புகழ நீர்வாழும் பெரு வாழ்வு யார் தந்த நல்வாழ்வு? சீர் மிகுந்த யாழ்ப்பாணச் சீமையிலே, பேர்பெற்ற நல்லூராம் பதியினிலே, கார் பெற்ற தோகையோ? கண் பெற்ற வாண்முகமோ? நீர் பெற்ற நன்புலமோ? நாம் பெற்ற பெரும் பேருவென்ற உளம்மகிழ உத்தமராம் கந்தப்பபிள்ளையவர்கள் கனிவோடு நமக்களித்த நாவலப் பெருந்தகை நமக்களித்த நல் வாழ்வு!

மூன்றுபெரும்பிரிவுகளாய் விரிந்திருக்கும் நம் தமிழை மூவேந்தரும், முச் சங்கமும் தான் வளர்த்ததென இறுமாந்திருந்தோம். இயலும் இசையும் காமம் பயப்பன என்றெண்ணி வெறுத்து ஒதுக்கினர் சமணர். அது காலம் இசையும், நாடகமும் வளர்ச்சி குன்றின. நாடகத் தமிழோ முழுதும் அழிந்த தெனலாகும் காலம் அது. நாடகத் தமிழால் மாந்தர் பெறும் பெரும் பயன் கருதி அதன்பால் ஊக்கங்கொண்டோருள் கந்தப்பபிள்ளையவர்களும் ஒருவர். ஆயின் அவர் எழுதிய நாடகம் முற்றுப்பெற்றதாஎனில், இல்லை! நாடகம் முடியுமுன்னே நமன் வந்துவிட்டான். பாலமுதம் உண்டபிரான் நாவால் மறித்துச் செவியமுதம் வார்த்ததுபோல்ஒன்பான் வயதே நிறைந்த நாவலர் பிரான் நாடகத்தை முற்றுவித்தார். வறண்டு வரும தமிழ்ப்புலத்தில் புதுவெள்ளம் பெருக்கெடுக்க வான் திறந்த பெருமழையாய் வளர்ந்துவிட்டார் நாவலர்.

1845 -ஆம் ஆண்டு நாவலர், இலவசமாகக் கற்றுக் கொடுக்கும் தமிழ்ப் பணியை மேற்கொண்டார். வீடுதோறும் படியேறிப் பெறும் பிடியரிசியால் பள்ளி நடத்தினார். 1865 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிறுவியது போன்று பேருருவப் பேரிறையின் இதயத்தானமாம் தில்லையிலும் நின்று நிலவும் இப்பள்ளியைச் "சைவப் பிரகாசவித்தியாசாலை"யாக நிறுவினார். "எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள், இனமீன்ற தமிழ்நாடு தனக்கும், என்னால் இனையளவுநலமேனும் விளையுமென்றால் செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும்" என்னும் கொள்கைகொண்டார்.

தமிழில் உரைநடை நூல்களே இல்லையே என ஐயுறும் வண்ணம் பாக்கள்மிக்கு உரைநடை குறைந்த காலம். உரை நடையில் நாவலர் செய்த மறுமலர்ச்சி இன்றைய உரைநடையின் வளர்ச்சி இவர் உரைநடையில் மில்டனின் பழமை பாராட்டும் உணர்வும், ஷெல்லியின் கற்பனை வளமும், கீட்ஸின் அழகுணர்வும், வேர்ட்ஸ்வொர்த்தின் இயற்கை ஈடுபாடும், கோல்டுஸ்மித்தின் நகைச்சுவையுணர்வும் ததும்பக் காணலாம். சொல்லின் வளமும் தெள்ளிய நடையும், கருத்துச் செறிவும், இன்னோசையும் அமைய எழுதுவதே உரைநடை என்ற கொள்கையோடு, தருக்க நெறியிலும் சிலேடையிலும் எழுதும் ஆற்றல் இவர்க்கே உரியது. பிறர்கொள்கைகளை மறுத்து எழுதும் போதும் இவர் மிடுக்கான நடையுடன் தருக்க நெறி தவழ்ந்து இன்புறுத்துவதைக் காணலாம்.

நாடகத் துறையிலே மறுமலர்ச்சி; சொற்போர்த் துறையிலே மறுமலர்ச்சி! நாவலர் தமக்குக் கருவிலே அமைந்த திருவாகிய நாநலத்தைப் பயன்படுத்த யிடம் தேடிக்கொண்டிருந்தார். கல்விக்கூடங்களில் கற்பிப்பதும், ஏட்டில் உள்ள நூல்களை வெளியிடுவதும் தமிழும் சமயமும் பரவும் கருவிகளாயினும் கேட்டோரைப் பிணித்துக் கேளாரையும் வேட்பச்செய்து உள்ளம் திருத்தும் சொற்பெருக்கு இன்றியமையாதது என உணர்ந்தார். தமிழில் சமயச் சொற்பொழிவை முதன் முதலிலே நிகழ்த்தியவர் இவரே என்பர். தென்னாடு முழுதும் சென்று மன்னரும் மற்றை

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## திருமுறைப் பண்ணிசை விருந்து

மார்கழித் திருவாதிரைத்தினமாகிய 1-1-72 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் வண்ணை நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் காஞ்சீபுரம் மெய்கண்டாராதீன ஓதுவார்மூர்த்தி பண்ணிசைப் புலவர், தேவாரமணி திரு. P. A. S, இராஜசேகரன் அவர்கள் திருமுறை பண்ணிசை விருந்து அளிக்கவிருக்கின்றார்கள் என மேற்படி நிகழ்ச்சியமைப்பாளர் திருமதி. வைத்திலிங்கம் செல்லம்மா தெரியத் தருகின்றார்.

## ஒன்பதாம் பத்தாம் திருமுறைகள்

[செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான் க. கி. நடராஜன் B. O. L., Dip. in Ed கோலாலம்பூர் ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் திருமுறை மகாநாட்டில் நிகழ்த்திய தலைமைப் பேருரை]

(முன் வளர்ச்சி — 4)

### திருவிசைப்பாவுந் திருப்பல்லாண்டும்

திருவிசைப்பாவுந் திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறையாகும். திருவிசைப்பா என்பதற்கு (1) இசையுடன் பாடும் பாட்டு என்பதும் (2) இறைவன் புகழைச் சொல்லும் பாடல் என்பதும் கருத்து. திருவிசைபாப் பாடியவர் ஒன்பதின்மர். (1) திருமாளிகைத் தேவர் (2) கருவூர்த் தேவர் (3) சேந்தனார் (4) பூந்துருத்தி காடவ நம்பி (5) கண்டராதித்தர் (6) வேணாட்டடிகள் (7) திருவாலி அமுதனார் (8) புருடோத்தம நம்பி (9) சேதிராயர் என்னும் ஒன்பதின்மரும் திருவிசைப்பாப் பாடியுள்ளனர். இவற்றிற் காணப்படும் இசையமைதிதான் என்னே! இறைவனுடைய புகழ்தான் என்னே!!

(1) திருமாளிகைத் தேவரும் சேந்தனாரும் ஒரு காலத்தவரென்பது திருவீழிமிழலைச் சாசனத்தால் தெரிகின்றது. (2) கருவூர்த் தேவர் ஒரு பெரிய சித்தர். இவர்தம் பாடல்கள் மிக உருக்கமானவை; இனியவை.

தத்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவை நூறாயிரங் கூறிட்(டு)
அத்திலங் கொருகூ றுன்கண் வைத்தவருக்
கமருலகளிக்கும் நின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கை கொண்ட சோளேச்சரத் தானே.

என்று அவர் பாடும் உருக்கமான பாட்டைப் பாருங்கள்.

(3) சேந்தனார் திருவீழிமிழலையுள் இருந்தவர். திருவீழிமிழலையில் இறைவர் அப்பருக்கும் சம்பந்தருக்கும் பொற்காசு கொடுத்ததை இவர் பாடியுள்ளார். (4) பூந்துருத்தி காடவ நம்பி தேவாரம் பாடிய மூவரையும் தம் பாடல்களிற் குறித்துள்ளார். (5) கண்டராதித்தர் சோழ மன்னர். (6) வேணாட்டடிகள் சேரநாட்டின் ஒரு பகுதியாகிய வேணாட்டைச் சேர்ந்தவர், (7) திருவாலி அமுதனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் புகழ்ந்துள்ளார். (8) புருடோத்தம நம்பி (9) சேதிராயர் (ஆகிய) இருவரும் தில்லைப்பிரான் மீது அகப்பொருள் தழுவிய திருவிசைப்பாப் பாடியுள்ளனர். மூவர் பெருமக்களின் பாடல் பெறாத தலங்களுக்கும் இவர்கள் பாடல பாடியுள்ளனர் என்பது கருதத் தக்கது. திருக்கோயில்களிற் பாடப்பெறும் பஞ்ச புராணங்களிற் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டுக் தவறாது பாடப்படுவதிலிருந்து அவை பண்டு தொட்டுப் போற்றப்பட்டு வந்த சிறப்பைக் காண்கின்றோம்.

### திருமந்திரம்

'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' என்று திருத்தொண்டத் தொகையுள் நம்பியாரூரராற் போற்றப்படும் திருமூல நாயனார் தந்த திருமந்திரம் பத்தாந் திருமுறையாகும். திருமூலரது வரலாறே

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்

## புத்தாண்டுப் பிரார்த்தனை

— நல்லூரான் வெற்றிவேலன் —

அானுடைய அருளுடனே அஞ்சாமை வீரம்
தரணியிலே நேர்மையுடன் தயவுடைய தாழ்மை
பாந்தகலை கல்வியுடன் பண்புடைய தூய்மை
உரங்கொண்ட உடலுடனே உள உறுதிவேண்டும்

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது௵ மார்கழி௴ ௧௬-௨ வெள்ளிக்கிழமை [1971]

## திருவெம்பாவை

'மலவிருளூற் றுறங்காமன் மன்னு பரிபாகரருட்
செலமுழுக வருகவெனச் செப்ப திருவெம்பாவை'

ஆன்மா பெத்தநிலையில் ஆணவ இருளில் கட்டுப்பட்டு உறங்கிக்கொண்டிருக்கும் பொழுது இறைவன் தனது கருணையினால் அதனை விழிக்கச்செய்து அருளாகிய தடாகத்தில் முழுகச் செய்து பாசநீக்கத்தைப் புரியும் தத்துவத்தையே திருவெம்பாவை உணர்த்துகின்றது.

'திருவாதவூரடிகள் தமது ஞானாசாரியருடைய சொற்படி தில்லையை நோக்கி யாத்திரை செய்தற்காகத் திருப்பெருந்துறையிலிருந்து புறப்பட்டு இடையில் திருஉத்தரகோசமங்கை, சீகாழி, திருவாரூர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவண்ணாமலையை வந்தடைந்தார்.

மாதர்கொண் மாதரெல்லா மார்கழி திங்க டன்னி
லாதிரை முன்னீ ரைந்தே யாகிய தினங்க டம்மின்
மேதகு மனைக டோறு மறைத்திருள் விடிவதான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றடமாடல் செய்வார்.

திருவண்ணாமலையில் அழகையுடைய ஏழுவகைப் பருவமகளிரும மார்கழி மாசத்துத் திருவாதிரை நக்ஷத்திரத்திற்கு முன் பத்து தினங்களிலும் இருள் புலருகின்ற விடியற்காலத்தில் மேன்மைபொருந்திய வீடுகடோறும்போய் ஒருவரை ஒருவர் அழைத்துத் தம்முளொருங்கு கூடி நீரையுடைய தடாகத்தில் ஸ்நானஞ் செய்வார்கள். அம்மகளிர்களுடைய தன்மையைத் திருவாதவூரடிகள் கண்டு அவர்கள் கூறிய கூற்றாக நிலைபெற்ற திருவெம்பாவை என்னும் திருவாசகத்தை "ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்சோதியை' என்று தொடங்கிப் பாடியருளினார். திருவெம்பாவைப் பத்துத்தினங்களில் இத்திருப்பதிகம் ஆலயங்களிலும் மடாலயங்களிலும் அங்கங்குள்ள மூர்த்திகளுக்கு அபிஷேகாராதனைகள் செய்தபின்பு ஓதப்பெறும். திருவெம்பாவைத்தினங்களில் பல அடியார்கள் விரதமனுட்டித்துப் பக்தியுடன் இதனைப் பாராயணஞ்செய்வார்கள். இவ்விதமான திருவாசகம் திருவடியையடைதற்குச் சிறந்த சாதனமாகும். இதனை ஓதுகின்றவர்கள் ஆன்மபோதத்தையிழந்து சிவபோதத்தையடைவார்கள். 'சிற்றம்பலத்தைப் பாடுவாயாக' சிவனுடைய திருவருளைப் போன்ற நீரிலே ஆடுவாயாக' என ஒரு பெண் தனது தோழிக்குக் கூறுகின்றாள்.

இறைவனே! எமது அவயவங்களெல்லாம் உனது பணிக்கே உபயோகப்படும்படி கருணை செய்யவேண்டும், அங்ஙனம் செய்வோமாயின் சூரியன் திசை மாறி உதித்தாலும் குறைவில்லை என இன்னொரு செய்யுளில் கூறி இறை பணியை வற்புறுத்துகின்றனர்.

ஈற்றில் திருவடிகளுடைய பெருமையை விளக்கி அவற்றுக்கு வணக்கம் செய்கின்றார்.

உலகுக்கு ஆதியாகவுள்ளதும் சிவனுடைய திருவடி. முடிவாகவுள்ளதும் அவருடைய திருவடி. எல்லாவுயிர்களுக்கும் இறுதியும் திருவடி, திருமாலும் பிரமனும் காணாத திருவடி, நம்மை ஆட்கொள்ளுவதும் திருவடி. அத்தகைய திருவடியை வணங்குவோமாக. திருவடிப்பேறே திருவாசகத்தின் பயன் என்பதைத் திருவெம்பாவையாகிய திவ்விய பதிகத்திற்காட்டி அதனை பூர்த்திசெய்கின்றார்.

## வானொலியில் புராண படனம் நடத்த ஒழுங்கு

புராண படனங்களை இலங்கை வானொலியில் ஒலிபரப்ப அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்கள். இத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாகக் கந்தபுராண படனம் எதிர் வரும் மாசி பங்குனி மாதங்களில் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

உ

## சைவச் சொற்பொழிவு

சைவபரிபாலன சபையின் சார்பில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில், காஞ்சிபுரம் ஸ்ரீ மெய்கண்டார் சந்தானம் ஞானபீட தொண்டைமண்டலாதீன குருமஹா சந்நிதானம் சீலஸ்ரீ. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 4, 5, 6-1-1972 (செவ்வாய், புதன், வியாழன்) ஆகிய மூன்று நாள்களிலும் மாலை 6 மணிமுதல்

### "திருவருட்பயன்"

என்னும் சித்தாந்த சாத்திரப் பொருள் விளக்கம் அருள்வார்கள். அன்புடைப் பெருமக்கள் வந்து கேட்டுச் சிவபுண்ணியத்தை வளர்த்துக்கொள்வார்களாக.

வை. இரகுநாதமுதலியார்,
காரியதரிசி,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

சைவ பரிபாலனசபை, யாழ்ப்பாணம். 31-12-71.

## மரவரி நீக்கம்

### சைவபரிபாலன சபை பூரண ஆதரவு

"இந்து பௌத்த சமயங்கள் நிலவும் ஈழத் திருநாட்டின் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து வந்த மரவரியை அரசாங்கம நீக்கியதை சைவ பரிபாலன சபை பாராட்டுகின்றது. சைவபரிபாலன சபையின் நோக்கம் பூரண மதுவிலக்காகும்"

இவ்வாறான பொருள் அடங்கிய குறிப்பு ஒன்றை சைவ பரிபாலன சபையின் நிருவாகசபை நிதிமந்திரி அவர்களுக்கும் பிரதம மந்திரி அவர்களுக்கும் அனுப்பியுள்ளது.

## திருக்குறள்

(உரைத் தொகை) (முற்றொடர்— 2)

THE GREAT KURAL : Introduction

[சிவபக்தமாமணி திரு ச. சூரசங்காரன் அவர்கள், நல்லூர்]

1

### பாயிரவியல்

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின்.

தூய அறிவாக இருக்கின்ற பகவானுடைய நிலைத்த இன்பமளிக்கும் திருவடிகளை வணங்கமாட்டாரென்றால் மக்கள் கல்வி கற்றதனால் அடையக்கூடிய பயன் யாது?

Of what avail is learning if those who learn do not worship the Feet of Bhagavan, the Pure Intelligence, which beatow eternal bliss?

தொழாஅர் — இடையறாது தொழுதுகொண்டே இருக்கமாட்டார். பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் நற்றாள் என்றார் என்று விளக்குவர் பரிமேலழகர். (வளரும்)

## ஒன்பதாம் பத்தாந் திருமுறைகள்

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

மிக இன்பகரமானது என்பதை நீங்கள் அறிவீர்கள். வடமொழியிலுள்ள ஆகமங்களின் பொருள்களையெல்லாம் தமிழில் தருவதற்காகவே தம்மை இறைவன் படைத்தார் என்று நம்புகிறார். 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்று அவரே சொல்லுதல் காண்க அவரது வரலாறு கூறும் சேக்கிழாரும் அதனை வழிமொழிகின்றார். திருமந்திரம் போல்வதொரு நூலை வேறு எந்த மொழியிலும் காணமுடியாது.

ஒன்பது தந்திரங்களாக இந்நூலில் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து, வேதாமச் சிறப்பு திருமூலர் வரலாறு ஆகியன கூறப்படுகின்றன. முதலாந் தந்திரத்தில் பொதுவாக அமைந்த உபதேசம், யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, கொல்லாமை, கல்வி, கள்ளுண்ணாமை முதலியன கூறப்படுகின்றன. இரண்டாந் தரத்தில் அட்ட வீரட்டம், இலிங்க புராணம் பஞ்சகிருத்தியம், கர்ப்பக் கிரியை. சிவநிந்தை, குருநிந்தை முதலியன கூறப்படுகின்றன. மூன்றாந் தந்திரத்தில் அட்டாங்க யோகம், அட்டமா சித்தி முதலியன சொல்லப்படுகின்றன. நான்காந் தந்திரத்தில் திரு அம்பலச் சக்கரம். நவகுண்டம், வயிரவி மந்திரம முதலியன சொல்லப்படுகின்றன. ஐந்தாந் தந்திரத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம். சத்திநிபாதம் முதலியன எடுத்தாளப்படுகின்றன. ஆறாந் தந்திரத்தில் குரு தரிசனம், திருநீறு, துறவு, தவவேடம் முதலியன சொல்லப்படுகின்றன. ஏழாந் தந்தி

(வளர்ச்சி 3ஆம் பக்கம்)

## சென்னை, சைவ சித்தாந்த சமாச சைவப்புலவர் பரீட்சை

சென்னை, சைவசித்தாந்த சமாசம் ஆண்டுதோறும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்துக்கூடாக நடாத்தும் சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் பரீட்சைகள் சென்ற சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மகாவித்தியாலயத்திலும், மட்டக்களப்பில் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் செவ்வனே நடைபெற்றன.

யாழ்ப்பாணத் தேர்வுத்தானத்திற்குக் கொழும்பில் இருந்தும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்தும் பரீட்சார்த்திகள் தோற்றினர். மட்டக்களப்பில் நடைபெற்ற தேர்வுக்குத் திருகோணமலைப் பகுதி, மட்டக்களப்புப் பகுதியாகியவற்றில் இருந்து பரீட்சார்த்திகள் தோற்றினர்.

சென்ற பத்தாண்டுகளாக அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்துச்கூடாக நடைபெறும் இப்பரீட்சைக்கு வருடா வருடம் தோற்றும் பரீட்சார்த்திகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சைவப்புலவர் சங்கம் ஆண்டுதோறும் சைவப் புலவர் மகாநாடு வைத்துப் பரீட்சையில் சித்தியடைவோர்க்குப் பாராட்டும் கௌரவமும் புரிந்து பட்டம் அளித்து வருவதும் முக்கியமான தொன்றாகும். மேலும் இப்பரீட்சை விரிவுபெற சைவ நன்மாணக்கரும், அறிஞரும் ஆதரவையளிப்பார்களாக.

## நாவலரும்............

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

யோரும் வரவேற்றுச் சிறப்பித்து நானிலத்தின் நாவலன நம நாவலர் பெருமானே என்று அகமகிழ்ந்தளித்த பட்டமே 'நாவலர்' பட்டமாகும். அக்காலத்தில் தமிழ்நாட்டில் பேச வல்லார் மிகக் குறைந்தவர்களே. "பகையகத்துச் சாவார் எளியர் அரியர், அவையகத்து அஞ்சா தவர்" போர்க்களம் சென்று அஞ்சாது சமர்புரிந்து துறக்கம் பெறுவோரினும், அஞ்சாது அவைக்களம் நின்று பேச வல்லார் மிக அரியர். அவையிலே பேசுவோர் சிறந்த நாவலர் எனப்புகழ பெறுவதற்குரிய இலக்கணங்களில் தோற்றப் பொலிவும் ஒன்றாகும். வெண்ணீறு விளங்கும மேனியும், கண்டிகை அணி செய்யும கழுத்தும், பட்டாடைப் பொலிவும, பருவுடலும், புது வண்ணமும், கால்மேல் கால்வைத்து அமரும் காட்சியும் அவையோர் யாவரையும் கவர்வனவாம். பேச்சிலும, எழுத்திலும் மட்டுமன்றி சமயத்துறையிலும் மறுமலர்ச்சி.

நல்லதொரு சமயம் நம் சமயம் என்றறைந்த சாக்கியர்க்கு அனலாலும், புனலாலும் வாதிட்ட அந்நிகழ்ச்சி ஆங்கு நினைவுகூரற்பாலது. சீர்பரவும் புகலிவேந்தன் செய்தபெரு வாதத்தைப் பார்புகழும் நாவலருமசெய்தபெரு வாதத்தைப் பார்புகழும நாவலரும் செய்ததொரு வேளையுண்டு.

"வாதிப்பதினால் மாத்திரம் மெய்வேதத்தைக்கண்டு பிடித்தோர் உண்டோ?' என வாதிட்ட கோப்பாய் மாணாக்கருக்கு அவரளித்த விடையைச்சான்று காட்டிச்

வளர்ச்சி 3-ம் பக்கம்

# இளைஞர்களின் வளர்ச்சி

(பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்)

பெற்ருர், உபாத்திமார், இளைஞர்கள் ஆகிய முத்திறத்தவர்களின் கடமைகள்:

(முன் வளர்ச்சி — 3)

3. இளைஞர் கடமை

"உடம்பினை முன்னம்
இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக குள்ளே
உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன்
கோயில் கொண்டானென்று
உடம்பினை யான்இருந்து
ஓர்புகின்றேனே''

என்று திருமூலர் கூறுவதிலிருந்து மனத்தைக் கடவுளிடத்தே செலுத்தி, அதில் ஈடுபட்டு வரவேண்டியது அவசியம். பழங்காலத்தில் கல்வியும், சமய அறிவும் ஆலயங்களிலே போதிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இறைவன் சந்நிதியிலேயே மாணவர் பயில்வதும், பெரியோர் சமய உண்மைகளைப் பயிற்றுவதும் பெருவழக்கு. இந்தியாவில் இவ் வழக்கம் பெருகியிருந்தது. எங்கள் இலங்கையிலும் இருந்துவந்திருக்கிறது. இக் காலத்திலும் சைவப்பாடசாலைகள் ஆலயங்களுக்குப் பக்கத்தில் அல்லது சற்று தூரத்தில் இருக்கின்றன. உதாரணம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பாடசாலை வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலுக்கு கிட்டயிருக்கிறது அச்சுவேலி பிள்ளையார் கோயிலுக்குப் பிற்பக்கத்தில் பாடசாலை இருக்கிறது பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலை

திருமுறைகள், சாத்திரங்கள், வேறு இலக்கியங்கள் இவற்றைப்பயின்றவர் யாரேனும் ஒருவராவது ஒவ்வொரு

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

# ஒன்பதாம் பத்தாந் திருமுறைகள்

(2- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

ரத்தில் ஆருதாரம், சிவபூசை, குருபூஜை, சமாதிக் கிரியை, பசு இலக்கணம் முதலியன விளக்கப்படுகின்றன. எட்டாந் தந்திரத்தில் அவத்தைகள், வாய்மை, அவா அறுத்தல், பத்தி முத்தி முதலியன பேசப்படுகின்றன. ஒன்பதாந் தந்திரத்தில் பஞ்சாட்சரம், சிவ தரிசனம், சூனிய சம்பாஷணை, தோத்திரம் ஆகியன கூறப்படுகின்றன.

சித்தாந்த சாத்திரம் பதினுன்கும் இயற்றப்படுவதற்கு முன் இதுவே சித்தாந்த சாத்திரமாகத் திகழ்ந்ததெனலாம். சித்தாந்த சாத்திரங்களுள் முதலிரண்டு நூல்களுமாக விளங்குவன திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் ஆகியவையாம். இவை இரண்டும் திருமந்திரத்தையே பொதுவாக அடியொற்றிச் செல்வனவாம். இந்நூலாசிரியர்கள் இருவரும் திருமூலர் மரபில் வந்தவராவர். தாயுமான அடிகளும் தமது குருவாகிய மௌனகுரு மூலன் மரபில் வந்தவர் என்கின்ருர். அருளையர் அருள் வாக்கிய அகவலில்,

'மூலன் மரபில் முளைத்த மௌனிதன்
பாலன்யா னெனவும் பரிவோடும் பகர்ந்தான்'
எனவும்,
மந்த்ர குருவே யோக தந்த்ரா குருவே மூலன்
மரபில்வரு மௌன குருவே'

எனவும் அவர் பாடுதல் காண்க. திருமந்திரத்தின் பெருமை விரிப்பிற் பெருகும்.

சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய நூல்கள் எடுத்தாளும் சொற்ருெடர்களுக்கும் உவமைகட்கும் திருமந்திரம் எடுத்தாளும் சொற்ருெடர்களுக்கும் உவமைகட்குமிடையே நெருங்கிய ஒற்றுமையிருத்தலைப் பல செய்யுள்களிற் காணலாம். திரோபவத்தைப் பற்றித் திருமூலர் கூறும் இன்பமான பாடலைப் பாருங்கள்.

'உள்ளத்து ஒருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட்டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் நானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருஅறி யாதே''

என்பது என்ன மாயம்! பாட்டின் எளிமை தான் என்னே!! அதன்கண் உள்ள பொருள் ஆழந்தான் என்னே!!! அனுபவந்தான் என்னே!!!! என்றல்லவா வியக்கின்ருேம். நிற்க.

## பதினெராந் திருமுறை

ஆலவாய் அவிர்சடைக் கடவுள் பாணபத்திரருக்காகச் சேரமான் பெருமாளுயருக்கு எழுதிய சீட்டுக் கவிபோன்ற ஒப்புயர்வற்ற திருமுகப் பாசுரம் முதல் நம்பியாண்டார் நம்பி பாடியருளிய பிரபந்தங்கள் ஈருக 41 பிரபந்தங்களைக் கொண்டது பதினெராந் திருமுறையாகும். இத்துறையில் 1388 பாடல்கள் இப்போது கிடைக்கின்றன. சில பிரபந்தங்களிற் சில பாடல்கள் கிடைக்கவில்லை. திருமுகப்பாசுரம் தொடக்கம் பட்டினத்துப் பிள்ளையார் இயற்றிய 'திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது' வரையுள்ள 31 பிரபந்தங்களை நமபியாண்டார் நம்பி தொகுத்தார். பின் அரசனது வேண்டுகோளின்படி நமபியாண்டார் நம்பி இயற்றிய பத்துப் பிரபந்தங்களைப் பதினெராந் திருமுறையிற் பிறர் சேர்த்தனர். ஆகவே, இத் திருமுறையிலே 41 பிரபந்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தப் பிரபந்தங்களை இயற்றியவர்-

1. ஆலவா யவிர்சடைக் கடவுள், 2. காரைக்காலம்மையார். 3. ஐயடிகள் காடவர் கோன் நாயனர், 4. சேரமான் பெருமாள் நாயனர். 5. நக்கீரதேவர், 6. கல்லாடனர், 7. கபிலதேவர், 8 பரணதேவர்' 9. இளம்பெருமானடிகள், 10 அதிரா அடிகள், 11. பட்டினத்துப் பிள்ளையார், 12. நம்பியாண்டார் நமபிகள் என்போராவர்.

இப்பிரபந்தங்களுள், விநாயகரைப் பற்றியவை 3, முருகனைப் பற்றியது 1, சிவபெருமானைப் பற்றியவை 26, திருஞானசம்பந்தரைப் பற்றியவை 6, திருநாவுக்கரசு நாயனரைப் பற்றியது 1; கண்ணப்பரைப் பற்றியவை 2, சேரமான பெருமாளுயனரைப் பாட்டுடைத் தலைவராக உடையது 1, திருத்தொண்டர் அனைவரையும் பற்றியது 1, ஆக 41 பிரபந்தங்களாகின்றன.

(வளரும்)

## மகாகும்பாபிடேகம்

சிதம்பரம், ஸ்ரீ ஸபாநாயகர் கோயிலிலிருக்கும் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாளுக்கும், மற்ற பரிவாரங்களுககும் விரோதி கிருது ஞூ தைத்திங்கள் 23-ம் நாள் (5—2—72) ஞாயிற்றுக் கிழமை அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு அன்பர்கள் அனைவரும் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து, கும்பாபிஷேகத்தை சிறப்பித்து ஸ்ரீ அம்பாளின் கிருபைக்குப் பாத்திரர்களாகும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகின்ருர்கள். ஷை கும்பாபிஷேகத்திற்காக ஸ்ரீ என். எம். பொன்னம்பலப்பிள்ளை அவர்களைத் தலைவராகக்கமிட்டியொன்று நிறுவப்பட்டிருக்கிறது. ஷை கும்பாபிஷேகத்திற்கு பொருளுதவி செய்கின்றவர்கள், ஸ்ரீ ரெ பாலசுப்பிரமணியன் செட்டியார். பொருளாளர், ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் கும்பாபிஷேகக் கமிட்டி. சிதம்பரம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கக கோரப்படுகிருர்கள். (ந. வி.)

## மண்டலாபிஷேக நிறைவு விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 25 ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருமேனியை அடக்கம் செய்துள்ள ஆதீன ஆனந்த பரவசர் பூங்காவிலுள்ள சமாதித் திருக்கோயிலுக்கு 26 ஆவது பட்டம் குருமகா சந்நிதானம ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மார்கழி மீ 10 ம் நாள் காலை எழுந்தருளி 45 ஆவது நாள் மண்டலாபிஷேக நிறைவு விழாவை சிறப்பாக நடத்தி வைத்து குருமூர்த்தவழிபாடுகளை செய்துகொண்டு எல்லோருக்கும் அருள் பிரசாதம் வழங்கினர்கள்.

சென்னை உயர்நீதிமன் றநீதிபதி உயர்திரு, கிருஷ்ணசாமிரெட்டியார் அவர்கள்: திருவாசகமணி திரு. கே. எம். பாலசுபபிரமணியம் அவர்கள் 'திருக்குறள்' திருமுனுசாமி அவர்கள் மற்றும்பெருமக்கள் நிறைய வருகை புரிந்து குருமூர்த்தத் தரிசனம் செய்தார்கள் நண்பகலில்மாகேசுவரபூசையும்அன்னம்பாலிப்பும்நிகழ்ந்தது.

(எமது சிதம்பரம் நிருபர்)
திரு. மா. பாலசுப்பிரமணியன்

## கோவிற் பூசைகளுக்கு உதவி செய்ய வொண்ணுதா?



பக்தர் "பொங்கல்பூசைக்கோ-கோவிற் தேவைகளுக்கோ பயறு, சர்க்கரை போன்ற பொருட்களைப் பெறுவது பெரும தர்ம சங்கடமாயிருக்குதே! இத் தட்டுப்பாடேளிஞல் இறைவழிபாடுபுரிவோர் உள்ளம் கோணுதபடியிருக்க வேண்டுமேயென எந்தத் தலைவரும் சிந்திக்காததேன்?

சித்தர்: "தலைவர்களுக்கு வேறு வேலையெதுவும் இல்லையா...? அவர்கள் ஒரு வட்டாரத்துக்கு எத்தனை கள்ளுத்தவறணைகள் திறப்பது? எனைய மதுவகைகளை மக்கள் எப்படித் தட்டுப்பாடின்றிப் பெற வழி செய்யலாம்! என்பனபோன்ற பிரச்சினைகளுடன் நிற்கினம்; பொங்கல் - பூசைக்கு இதுவேண்டும் அதுவேண்டும்என்றுகேட்டால் தவருது பங்கீட்டுப் புத்தகத்துக்காவது 'பயறு சர்க்கரை' வழங்குவார்களே! மதுவகையா - உணவு வகையா நமது நாட்டுக்கு இன்று அவசியம என்பதை மக்கள் உணர்ந்து அப்பொருட்களை விருத்தியாக்குதற்கு முன்வரக்கூடாதா?

"நாயன்மார் - நாதன்"

## அணிந்துரை அரங்கம்

## மகாமாரித்தேவி திவ்விய கரணி

பதிப்பாசிரியர்:
சி. கணபதிப்பிள்ளை

மகாமாரித்தேவி திவ்விய கரணி என்ற தேவி வழிபாட்டுத் திரட்டு நூல் வரப்பெற்ருேம். சக்தி வேறு சிவம் வேறன்று. மலர்வேறு மணம் வேருகப் பிரிக்க முடியாது. சக்தி வழிபாடு சிவவழிபாடே. மட்டக்களப்பில் சக்தி வழிபாட்டில் நன்கு திளைத்த பல பேரறிஞர்களின் பாடற் பொககிஷங்களைச் சிதையா வண்ணம் பிற்காலத்தவரும் படித்துச் சக்தியருள் பெற்று நல்வாழ்வு பெறவேண்டும் என்ற பெருநோக்குடன் திரு. சி. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் அழகாக அச்சுவாகனமேற்றிப் பெருந்தொண்டு செய்து நூலை வெளியிட்டிருக்கிருர்கள்,

இது அவரின் தள்ளாத காலத்தில் செய்த பெருந்தொண்டு மாத்திரமல்ல, நாமும்பின்னவர்களும்செய்த தவமேயாகும்.

பரம்பரைத்தேவிவழிபாட்டில் சிறந்த பெரியோர் வழி வந்த ஆசிரியரின் தொண்டு எல்லோராலும் பாராட்டக் கூடியதாகும். இன்னும் இது போன்ற பல அரிய பொக்கிஷ நூல்களைத் தேடி எடுத்து வெளியிட அவர்களுக்கு உதவி செய்வது எங்கள் முக்கிய கடனாகும்.

## நூல்கள் அன்பளிப்பு

வண்-மேற்கு அரசடி, விநாயகர் ஆலய பஜனைக் கோஷ்டியரால் திருவெம்பாவைக் காலங்களில் நடாத்தி வந்த பஜனைகளிற் கலந்துகொண்ட சிறுவர் சிறுமிகளுக்குத் திருவாதிரையன்று (நாளை) மாலை 6 மணியளவில் நிகழும் விசேஷ பூசை ஆராதனை வழிபாட்டைத் தொடர்ந்து மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார் நூல்கள் அன்பளிப்பாகவழங்குவார்கள். விசேஷ கலை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

# திருவூடல்

யாழ்ப்பாணம், வண்ணைநகர் ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவிலில் மார்கழித் திருவாதிரை உற்சவத்தில் சுவாமி சந்நிதானத்தில் ஓதப்படுவது

யாழ்ப்பாணம். வண்ணைநகர் பாரத்துவாசி க. அநந்தசுப்பையர் அவர்கள் கோவை செய்தது.

ஷை கோவில் ஆதீன கர்த்தர் ஸ்ரீமான் பொ. க. பொன்னுச்சாமி செட்டியார் அவர்கள் கேள்விப்படி, யாழ்ப்பாணம் ஸ்ரீ காந்தா அச்சகம் — புத்தகசாலை இலவச வெளியீடாக வெளிவந்துள்ளது.

வைத்தீஸ்வர வித்தியாலயம் முன்னுள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் வழங்கிய நூலின் அறிமுகம்:

சில தினங்களுக்குமுன் பொன்னுவெளி இளைப்பாறிய திரு கு. அருளம்பலம் அவர்கள் இல்லத்துககு நாவலர் நூல் நிலையத்துக்குச் சிறு நூல்களைப் பெறுவதற்காகச் சென்றேன். சென்றபொழுது அவர்களிடம் பல அரிய பழைய பிரசுரங்கள் இருப்பதைக் கண்டேன். அவைகளெல்லாம் அவர்கள் பாட்டனரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் மாணுககருமான திரு. வீ. சின்னத்தம்பி அவர்களாலே சேகரிக்கப்பட்டவை யென்பதை அறிந்தேன்,

நான் அங்குகண்ட பிரசுரங்களிலொன்று வண்ணை, வைத்தீஸ்வரன் ஆலயத்தில் மார்கழி திருவாதிரை உற்சவத்தில் படிக்கப்படும் "திருவூடல்'' என்பதாகும். இப்பிரசுரம் 60 ஆண்டுகளுக்குமுன் பதிப்பிக்கப்பட்டதாகும இந்நூல் அச்சுப் பிரதிகள் இப்பொழுது கிடைககாதபடியால், இந்நூலைச் சைவ அன்பர்கள பெற்றுக்கொள்ள உதவ வேண்டுமென்ற எனது விருப்பத்தை யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சக உரிமையாளரும், பல அரிய நூல்களை வெளியிட்டு வருடவருமான திரு. மு கணபதிப்பிள்ளை அவர்களுக்குத்தெரிவித்தேன். அவர்கள இப்பிரதியையும். வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் சிவஸ்ரீ சு, கைலாசநாதக்குருக்கள் அவர்களிடமிருந்த கைப்பிரதியையும் ஒப்புநோக்கி இந் நூலை வெளியிட்டுள்ளார்கள். அவர்களுக்கு சைவமக்கள் நன்றி உரிததாகுக,

இப்பிரசுரத்தின் விபரங்களெல்லாவற்றையும் இப் பதிப்பின் முதற் பக்கத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.

ச. அம்பிகைபாகன்
'மணி மனை'
மல்லாகம்.

## நாவலரும் மறுமலர்ச்சி

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

சமயத் துறையில் அவர் செய்த மறுமலர்ச்சியை நிலைநாட்டி எனதுரையை முடிக்கின்றேன்.

அன்றலர்ந்த செந்தாமரையினை வென்றபெரு இராமனைப்போல் முகமலர்ச்சி கொண்டு, மொழியிலும் சமயத்திலும் மறுமலர்ச்சிகண்ட நாவலர் கோன் நற்பணியை இதயமலர்ச்சியோடு கூறுதற்கு வாய்ப்பளித்தமை எண்ணி மனமலர்ச்சியோடு அமைகிறேன்.

## தமிழ் நூல்களுக்கு நிதியுதவி

—0—

ஈழத்து எழுத்தாளர்களின் நிதியுதவித் திட்டம் வருங்காலத்தில் தமிழ எழுத்தாளர்களின் நூல்களுக்கும் விஸ்தரிககப்படவிருக்கிறது.

## இளைஞர்களின்

3-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

ஊரிலுமிருப்பர். இளைஞர்கள் தங்கள் பெற்றாரின் துணைகொண்டு இவருக்கு வேண்டிய ஊக்கமளித்து. தங்களுக்குச் சமய அறிவூட்டும்படி கேட்டுக் கொண்டு முறையாக நூல்களைக் கற்று வந்தால் அவர்களிடையே சமய அறிவும், சைவ உணர்ச்சியும் அழுத்தமாக உண்டாகும். "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" —என்ற விரிந்த நோக்கத்தோடு இவர்கள் தாங்கள் பெற்ற அறிவையும் சமயக் கல்வியையும் தங்கள் ஊர்களிலுள்ள எழுத்தறிவில்லாத பாமர மக்களிடையே பரவச் செய்யலாம்.

இதைவிட்டு மாணவர்கள் தங்கள் மனத்தை அது செல்லும் வழிகளிலெல்லாஞ் செலுத்தி வாழ்நாளைக் குறைத்து மடிந்துவிடுவதால் பயனில்லை என்பது உண்மை.

சித்தர் பாடல் ஒன்று, அதை மாணவர் பலர் அறியாமல் இருக்கலாம். அது,

"நந்தவனத்தில் ஓராண்டி,
அவன் நாலாறு மாதமாய்க்
குயவனை வேண்டிக் கொண்டு
வந்தான் ஒருதோண்டி
அதைக் கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத் தாண்டி"

என்பதாகும்.

'நந்தவனத்தில் ஓராண்டி' என்பது இவ்வுலகத்தில் பிறக்கவேண்டிய ஒரு உயிர்.

'நாலாறு மாதமாய் குயவனை வேண்டி' என்பது இவ்வுலகத்தில் பிறக்க வழி செய்ய வேண்டும் என்ற விருப்பத்தைக் காட்டி என்பதாகும்.

'குயவன்' என்பது பிரமன். பிரமன், குயவன் பானை தோண்டி குடம்முதலியவற்றைச் செய்வதுபோல உடம்புகளை அமைக்கிறான்.

'தோண்டி' என்பது உடல். இந்த உடல் கிடைத்வுடன் ஐம்புலன்களின் வழியே வாழ்க்கை நடத்துதல், கூத்தாடி, கூத்தாடி என்னுஞ் சொற்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பெறுதற்கரிய உடலைத் தீயவழிகளில் ஈடுபடுத்தி நாசஞ் செய்யக் கூடாது. இவ்வாறு நம்மையே நாம் கெடுத்துக்கொள்ளாத நிலைவேண்டுமானால் தெய்வ அருள்துணை செய்ய வேண்டும். இவ்வுண்மையை திருநாவுக்கரசர் பின்வரும் தேவாரத்தில் தெரிவிக்கிறார்.

"மனம்எனும் தோணிபற்றி
மதியெனுங் கோலையூன்றிச்
சினம் எனும் சரக்கை யேற்றிச்
செறிகடல் ஓடும்போது
மதன் எனும் பாறைதாக்கி,
மறியும்போது அறிய
வொண்ணாது
உனை உனும் உணர்வை நல்காய்
ஒற்றியூருடைய கோவே"

---

# கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ: இல. 10891

1. உடுப்பிட்டி வாசிகள் கார்த்திகேசு கந்தசாமியும்
2- பெண் அன்னம்மாவும் —வழக்காளிகள்

எதிராக

1. உடுப்பிட்டி வாசிகள் குட்டிப்பிள்ளை சின்னையாவும்
2. பெண் இராசம்மாவும் —எதிராளிகள்

மேற் குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்தகோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியு மிதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கு மாதனத்தை 1972-ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 28-ந் திகதி (28-1-72) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று உடுப்பிட்டிக்குறிச்சி "மல்லகுடும்பானும் மறுபிரிவுகளும்" சேர்ந்த விபர 18, 7/8. இது 1966 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 3ந் தேதி உலாந்தா மேஸ்தர் 8. ஏகாம்பரத்தால் விந்தாசிக்கப்பட்ட 741 ம் நம்பர் படத்தின்படி விபர 19. குளி 14. இப் படத்தின் 1ம் நம்பர் துண்டு விசாலம் விபர 9. குளி 9ம் கல்வீடு அத்திவாரம் அடுக்களை கிணற்றில் அரை (½) ப் பாகமும் பயிர்வகைகளும் எல்லைகிழக்கு மேற் கூறிய படத்தில் 2 ம் துண்டு வடக்கு வேலுப்பிள்ளை கந்தசாமிக்கும் மறுபேருக்கு முடைய வாதனமும் ஒழுங்கை முகப்பும். மேற்கு வண்டில் பாதை. தெற்கு மேற் கூறிய படத்தில் 3ம் நம்பர் துண்டு. இவை அடங்கலும் 7 குளி கொண்ட பொதுப் பாவிப்புக்காக விடப்பட்ட ஒழுங்கை நிலமாகிய 3-ம் நம்பர் துண்டில் அரைவாசியும்.

| | | |
|---|---|---|
| இக் காணியின் மதிக்கப்பட்ட விலை | ரூபா 11,500-00 | |
| தீர்வைத் தொகை | ரூபா | 2979-00 |
| 26-4-70 தொடக்கம் 23-9-70 வரை ரூபா 2000/- க்கு 10 வித வட்டி | | 83-32 |
| 24-9-70 தொடக்கம் 23-11-71 வரை ரூபா 3062/32 க்கு 5 வீத வட்டி | | 178-63 |
| கணக்குப் பார்த்து கோட்டுச் செலவு ரூபா 252-56 இதில் கொடுபட்ட ரூபா 130/- கழித்து | | 122-56 |
| | மொத்த ரூபா | 3363-51 |

புலோலி மேற்கு,
புலோலி, 27-12-71

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம். 363 31-12-71.

---

# COMMISSION SALE
# கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல, 10817

1. கணபதி சினித்தம்பி, கரணவாய் வடக்கு —வழக்காளி

எதிராக

1. A. மயிலு செல்லத்துரை, கரவெட்டிவடக்கு —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும்குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்விபரிக்கப்படுமாதனத்தை 1972-ஆம் ஆ. பெப்ரவரி மீ 9-ம் திகதி (9—2—72) புதன்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மழவராய குறிச்சியிறை 'பூவற்கரை' வி. பர. 8½ வடலிகளும் எல்லை கிழக்கும். தெற்கும் ஒழுங்கை, வடக்கு கணபதி கந்தையனுக்கும் மறுபேருக்கு முடையவாதனம், மேற்கு கணபதி பெண் மரகதத்துக்குமுடைய வாதனம். இதடங்கலிற் சொரியலாய் நாலிலொரு பங்கும் (மதிப்பிட்ட விலை ரூபா 3,187/-)

| | |
|---|---|
| தீர்வைத்தொகை: | 2,471 75 |
| வட்டி ரூபா 1500/-க்கு 10 வீதப்படி 23-2-70 தொடக்கம் 7-7-70 வரை | 43 75 |
| வட்டி ரூபா 2515-50க்கு 5 வீதப்படி 8-7-70 தொடக்கம் 14-6-71 வரை | 115 30 |
| | 2630 80 |
| கொடுக்கப்பட்டது | 1000 00 |
| | 1630 80 |
| வட்டி 1630-80க்கு 5 வீதப்படி 14-6-71 தொடக்கம் 9-2-72 வரை | 54 40 |
| செலவுத் தொகை: | 80 61 |
| மோத்தம் ரூபா | 1765 81 |

"குமரகோட்டம்"
வியாபாரி மூலை,
பருத்தித்துறை. 27—12—71

ந. மூத்துலிங்கம்
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பாளர்,
ஏல விற்பனையாளர்
M 362 71

---

# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 11030

1. மாரிமுத்து கந்தையாவும் பெண்
2. சிவக்கொழுந்து இருவரும் புத்தூர் மேற்கு.
புத்தூர். —வழக்காளி

எதிராக

1. கார்த்திகேசு செல்லத்துரையும் பெண்
2. சிவபாக்கியம், இருவரும் புத்தூர் கிழக்கு,
புத்தூர். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11030-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1972-ம் ஆ. தை மாதம் 17-ந்திகதி (17-1-72) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 7,550/- 9-8-69 தொடக்கம் 20-12-69 வரைக்கும் ரூபாய் 4,000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 499-55 சதம் முத்திரைச் செலவு ரூபாய் 12/- செலவில் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 100/- குறைக்க வேண்டியது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் வடக்கிறை 'உலைக்குளமும் உலைக்குளத்தலையும்' (Ulaikulam & Ulaikulathalaium) நிலப்பரப்பு 15. இதன் எல்லை கிழக்கு சுப்பிரமணியம் சதாசிவமும், சின்னக்குட்டி கந்தனின் காணிகள், வடக்கு கனகசபை முத்துக்குமாருவின் காணி, மேற்கு மளவராயர் கந்தையாவின் உரிமையாளர்களின் காணி, தெற்கு ஒழுங்கை

2. ஷை ஆவரங்கால் இறை "நீலந்தவட்டையும் மல்வட்டையும் (Neelanthawatnaium Malwathaium) இதன் நிலப்பரப்பு 38, இதில் நிலப்பரப்பு 30ம் கிணறும் சேர்த்து, எல்லை கிழக்கு புதியன் கிட்டினனின் பங்காளர்களினதும் உரிமையாளர்களினதும் காணி, வடக்கு கந்தையா காசிநாதருக்கும் பங்காளருக்குமுரிய காணி, மேற்கு வீரன் சுந்தரத்தின் காணி, தெற்கு சரவணமுத்து கந்தையாவின் காணி.

3. ஷை புத்தூர் வடக்கிறை 'சுடுகாடு கலட்டி' (Suduka-dukaladdy) இதன் நிலப்பரப்பு 16½ எல்லை கிழக்கு மகேஸ்வரன் பெண் பரமேஸ்வரியின் காணி. வடக்கு ஒழுங்கை மேற்கு சேதுபதி தாமோதரம்பிள்ளையின் காணி. தெற்கு இதில் குறிப்பிட்ட சட்டுக்காரரின் காணி.

வே. கோபாலபிள்ளை
22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம் 361 31—12—71

---

# கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு: இலக்கம், M B 11455

இளையதம்பி நடராஜா, மயிலிட்டி வடக்கு. —வழக்காளி

எதிராக

1 சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளையும்
2 பெண் மூத்தநாச்சி, மூலவை, மயிலிட்டி வடக்கு
காங்கேசன்துறை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் M B 11455-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1972-ம் ஆண்டு மாசி மாதம் 19-ம் திகதி (19-2-72) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவ்வாதனங்களுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதலும் வட்டியுமாக ரூபாய் 3853 - 97 சதம் இன்னும் 2500/- ரூபாவிற்கு 9-2-70 தொடக்கம் 10-5-70 வரைக்கும் பத்துவீத வட்டியுங் கூட்டிக் கூடிய தொகைக்கு 10—5—70 தொடக்கம் மூழுப்பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்து வீதவட்டியுங் கோட்டுச் செலவு ரூபா 422-30 சதமும் (ஏற்பட்ட செலவு 246-15, வெலியாத்துச்செலவு 90-70 இனிமேலேற்படும் செலவு 85-45,) இதில் கோட்டில் முதலால் கட்டிய ரூபாய் 1,500/-ம், செலவால் கொடுத்த ரூபாய் 150/- போக மிகுதி

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலி வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று மூலவை இறை 'கொம்பன் வத்தை' பர. நில: லா. 7 பனைகள் வடலிகளும் தென் கிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றுப் பங்கும் அதோடு சம்பந்தப்பட்டதும், வழமைபான வழிவாய்க்கால் பாவிப்புருத்தும் எல்லை கிழக்கு ஆறுமுகம் சின்னத்தம்பியினுருமைக்காரருக்குரியவாதனம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளைக்கும் கார்த்திகேசு விஸ்வலிங்கத்திற்குமுரியவாதனம், இதிற் சொரியலாய் அரைவாசி.

2. ஷை யிறை "பூம்பவனசிமா, அரசடி கொம்பன்வத்தை" பா. நில. லா. 12 வான்பயிர் செய்பயிர்களும் தென்னை மரங்களும், பனைகளும் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றுப் பங்கும் எல்லை கிழக்கு வன்னியர் பண்டாரத்திற்கும் ஈடுபிடித்தவருக்குமுரியவாதனம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு வன்னியர் பண்டாரத்திற்கும் மறுபேருக்கும் மற்றவர்களுக்கும் சங்கரப்பிள்ளை முருகுப்பிள்ளைக்குமுரியவாதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலத்திலும் அதைச் சேர்ந்தவைகளிலும் சொரியலாய் எட்டிலொன்று.

தா. க. பொன்னுத்துரை J. P
"அகிலகம்"
28/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம், 26-12-71

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
M 364-71

---

# கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

இல: M B 11872

1. இ. மகேசனும் பெண்
2. ரகுலேஸ்வரியும்,
மயிலிட்டி வடக்கு,
—வழக்காளிகள்

எதிராக

1. சின்னத்தம்பி வல்லிபுரமும் பெண்
2. முத்துப்பிள்ளையும், மயிலிட்டி தற்போது காங்கேசன்துறை. — எதிராளிகள்.

யாழ்ப்பாண மாவட்டக் கோட்டின் M B 11872ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம், 1972ம் ஆண்டு மாசி மாதம் 26ம் திகதி (26—2—72) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவ்வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக ரூபாய் 2,084-40 சதம் இன்னும் 1200/- ரூபாவிற்கு 22—7—70 தொடக்கம் 16—12—70 வரைக்கும் பன்னிரண்டு வீத வட்டியுங் கூட்டிக் கூடியதொகைக்கு 16—12—70 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்து வீத வட்டியுங் கோட்டுச் செலவு ரூபாய் 336-15சதமும், ஏற்பட்டசெலவு 201-45 வெலியாத்துச்செலவு 70-70, இனிமேலேற்படும்செலவு 64/-)

### ஆதன வீபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலி-வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று தையிட்டியிறை "கிலவத்தை" பா. நில லா. 5 பனைகளும் செய்பயிர்களும் எல்லை கிழக்கும், வடக்கும் ஒழுங்கை, மேற்கு கையொழுங்கையும் சின்னத்தம்பி கந்தப்பிள்ளையின் மகள் இலட்சுமிக்குமுரிய ஆதனம், தெற்கு கணபதி மகள்பெண் தெய்வானைக்கும் மறுபேருக்குமுரியவாதனம் இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலும். மேற்குப் பக்கமாயிருக்கும் கிணற்றுப் பங்கும் துரவையும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புருத்தும்.

தா, க. பொன்னுத்துரை J P
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
"அகிலகம்" 28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம், 26-12-71

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக; வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 31—12—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்